

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் மேற்கு ஒன்றியம், ஸ்டாலின் நகர், இந்திரா நகர், விராட்டிங்குப்பம், கே.வி.ஆர்.நகர், அயனம்பாளையம் , ஆலாத்தூர், கொட்டப்பாக்கத்துவேளி, கொய்யாத்தோப்பு, மேட்டுப்பாளையம், பெரியார் நகர், முத்தியால்பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் உயர்கல்வி துறை அமைச்சர். முனைவர் க. பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வீதி, வீதியாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தனர். தளி ஒய்.பிரகாஷ், திருவாரூர் மதிவாணன், ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், சச்சிதானந்தம், உதயகுமார், ரா.சதீஷ், செ.தினகரன், மருத்துவ அணி செந்தில்குமார், ப.அன்பரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ரகுநாத், திவாகர், சீனிவாசன், நரசிம்மன், ராகவன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் தென்மேற்கு பருவமழையை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அம்பலமூலா ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தங்கியுள்ள பொது மக்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு அவர்களது கோரிக்கைகளை கேட்டு அறிந்து நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு.அருணா, கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி கௌசிக், கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# சட்டப்பேரவையில் அமைச்சர் மதிவேந்தன் பதிலுரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

6. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் இரவு வானத்தின் உள்ளார்ந்த வனப்பை இயற்கை கலாச்சார மற்றும் வரலாற்று வளமாக அங்கீகரிக்கும் வகையில், ரூ.1.00 கோடி செலவில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும். பாதுகாக்கப்பட்ட பகுதியில் இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இயற்கை இருளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய இரவுப் பூங்காக்கள் உலகளாவிய அளவில் கணிசமான ஆபத்தை விளை விக்கும் ஒளி மாசுபாட்டின் உலகளாவிய அச்சுறுத்தலில் இருந்து விலைமதிப்பற்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவும். இது இரவுநேர விலங்கு களுக்கு இணக்கமான ஒரு பூங்காவாக இருக்கும். இது மின்சார விளக்குகளின் பயன்பாட்டைக் குறைத்து இரவு வானத்தில் நட்சத்திரங்களைப் பார்ப்பதை அதிகரிக்கிறது. இது இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இரவு வான் பூங்காவாக அமையும்.

7. தமிழ்நாட்டின் கடற்கரைக்கு ஆண்டுதோறும் ஆலிவ் ரிட்லி (சிற்றாமை) ஆமைகள் மற்றும் பச்சை ஆமைகள் வருகை தருகின்றன. ஆமைகளை பாதுகாக்கும் நோக்கில், உள்ளூர் மீனவ தன்னார்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களை உள்ளடக்கிய ஆமை பாதுகாவலர் குழுக்கள் ஆமைகள் முட்டையிடும் பகுதிகளை பாதுகாப்பதற்கும், ஆமை குஞ்சுகளை மீண்டும் கடலுக்குள் பாதுகாப்பாக அனுப்ப உதவும் பணிகளிலும் ஈடுபடுத்தப்படும். வருடத்திற்கு 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. தஞ்சாவூர் வனக் கோட்டத்திற்கு உட்பட்ட கும்ப கோணம் வனச்சரக எல்லைக்குள் உள்ள அணைக்கரைப் பகுதி தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு முதலைகளின் (Crocodylus palustris) முக்கியமான வாழ்விடமாக உள்ளது. உள்ளூர் சமூகங்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முதலைகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மனிதமுதலை முரண்களை தடுக்கும்வண்ணம் முதலை இனத்தினை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் வகையிலும், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9. ஆர்க்கிடேரியம் என்பது மரங்களில் தொற்றி வளரும் பல்வேறு அழகான பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுப்புகளை வளர்ப்பதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு வசதியாகும். ஆர்க்கிடேரியங்கள் ஏற்கெனவே ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் கூடலூரில் நிறுவப் பட்டுள்ளன. பொது மக்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் தேவைக்காகவும், உள்ளூர் சமூகத்திற்கு ஆர்க்கிட் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை புரிய வைக்கவும் கூடலூர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆர்க்கிடேரியங்கள் நவீன வசதிகளுடன் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

10. தமிழ்நாட்டின் வனப் பகுதிகளில் உள்ள 40 மலையேற்ற வழித்தடங்களை தமிழ்நாடு அரசு கண்டறிந்துள்ளது. அந்த மலையேற்ற வழித்தடங்களுக்கான வரைபட புத்தகங்கள் உருவாக்கப்படுவதுடன், அத்தடங்களில் தேவையான அடிப்படை வசதிகள் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

A Trekking Atlas with 40 trekking routes in Tamil Nadu will be prepared and basic infrastructure facilities will be developed in all identified routes at a cost of Rs.4.00 crore.

## டாக்டர் ஏ.ஜே.டி.ஜான்சிங் வன உயிரின பாதுகாப்பு விருது - ரூ.25 இலட்சம்!

சாலைகளைப் பற்றியும், யானை வழித்தடங்களைப் பற்றியும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அதில், மிக முக்கியமாக, மாஞ்சோலை தோட்ட விவகாரம் பற்றி வெட்டுத் தீர்மானங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுகுறித்த வழக்குகள் தற்போது மாண்பமை நீதிமன்றத்தில் இருப்பதால், வனத் துறையின் களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் அமைந்துள்ள மாஞ்சோலை தோட்டப் பகுதியானது, தமிழ்நாடு அரசு Bombay for Mar Trading Corporation என்ற நிறுவனத்திற்கு குத்தகை விடப்பட்ட பகுதியாகும். குத்தகைக் காலம் முடிவடையும் நிலையில், அங்கு பணி செய்யும் தொழிலாளர்களின் மறுவாழ்வு உதவிகள் குறித்த கோரிக்கைகள் உள்ளன. இதுகுறித்த வழக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையி லுள்ளது. உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்பேரில், அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறையின் மானியக் கோரிக்கையை தயார் செய்ய எனக்கு பேருதவியாக இருந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, I.A.S. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், முதலமைச்சரின் செயலாளர்கள் மரியாதைக்குரிய நா. முருகானந்தம், I.A.S. அவர்களுக்கும், Dr. P. உமாநாத், I.A.S. அவர்களுக்கும், M.S. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், திருமதி. அனு ஜார்ஜ், I.A.S. அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச் சந்திரன், I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் ஆர். தினேஷ்குமார் அவர்களுக்கும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா ஸாஹு, I.A.S. அவர்க ளுக்கும்,

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத் துறைத் தலைவர் சுதான்ஷு குப்தா, I.F.S., அவர்களுக்கும், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, I.F.S., அவர்களுக்கும், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் முனைவர் வீ. நாகநாதன், I.F.S., அவர்களுக்கும் மற்றும் வனத்துறை உயர் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், வனத்துறையின் இந்த மானியக் கோரிக்கையின் மீது 47 உறுப்பினர் அவர்கள், 119 வெட்டுத் தீர்மானங்களை வழங்கியுள்ளனர். இவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள் வனப்பகுதிகளில் உள்ள, வன உரிமை சட்டம், சாலை வசதி, மரகத பூஞ்சோலை, வனத் தீயை கட்டுப்படுத்துதல், அந்நிய களைச்செடிகளை அகற்றுதல், பசுமை தமிழக திட்ட செயல்பாடுகள் போன்ற தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். இவைகளுக்கு எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பி லும், என்னுடைய பதிலுரையிலும் விளக்கம் தந்துள்ளேன் என நம்புகிறேன். மேலும், அலுவலகக் குடியிருப்புகள், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளைத் தந்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளின் மீது தனிக்கவனம் செலுத்தி நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுகொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் பதிலுரை வழங்கினார்.

### சேலம்-கோவையில் இந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும்!

# மதுரை அரசு மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் விரைவில் தொடங்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல் !

சென்னை, ஜூலை 2- சட்டப்பேரவையில் உறுப்பினர் ஆ.வெங்கடேசன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-

**ஆ.வெங்கடேசன்:** அரசு மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயரிய சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று காலையில்கூட ரூபாய் 13 கோடி செலவில், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் அதிநவீன Biplane மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் இன்றைக்கு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதேபோன்று இன்று மதியம் கூட 10 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மூளை இரத்த நாள Cath Lab ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதுவும்கூட இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனையில் முதன்முதலில் பயன்பாட்டிற்கு வருகிற மருத்துவக் கருவி. எனவே, அந்த வகையில் முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் தமிழக அரசு மருத்துவமனைகளில் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ. வெங்கடேசன்:** கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு செய்த செயற்கை கருத்தரிப்பு மையம் (IVF) மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எப்போது முழு செயல்பாட்டிற்கு வரும் என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) மதுரை மட்டுமின்றி தென் தமிழகத்தில் ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் இம்மன்றம் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.



**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** கடந்த ஆண்டு நிதி நிலை அறிவிப்புகளில், சென்னையிலும், மதுரையிலும் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஜூன் திங்கள் 7 ஆம் தேதி, சென்னை எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில், செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மையம் ஒன்று அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மிக விரைவில் தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நேற்றைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றாக சேலம் மற்றும் கோவையிலும்கூட செயற்கை கருத்தரித்தல் மையங்கள் இந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாமன்ற உறுப்பினருக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.



விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தொரவி பனப்பாக்கத்தில் (பாகம் எண் 226) கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசி பெற்ற வேட்பாளர், அன்னியூர் சிவாவை ஆதரித்து, வெற்றியின் சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு கழக நிர்வாகிகளுடன் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், வழக்கறிஞர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் வீடுவீடாகச் சென்று வாக்குகள் சேகரித்தனர். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை மாநாகர செயலாளர் ஆ.செந்தில் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், எம்.எம்.பாலு, ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன் மற்றும் சேக் அப்பா, இதயம் அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### குளச்சலில் மினி ஸ்டேடியம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

# குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூலை 2- குளச்சலில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள் என கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் தமிழ்நாட்டின் விளையாட்டுத்துறை பல மடங்கு முன்னேறிச் செல்கிறது. கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டுத்துறையில் புது பாய்ச்சலை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டிற்கான கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறார். இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டுகிறார். விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அனைத்து உதவி உதவிகளையும் செய்து கொடுத்து அவர்களின் சாதனைகளுக்கு உறுதுணையாக இருக்கிறார். விளையாட்டு வீரர்களின் சாதனையை, தமிழ்நாட்டின் சாதனையாகவும் மாற்றி வருகிறார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. கேலோ இந்தியா பதக்கப் பட்டியலில், தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்தது இதுவே முதல்முறை. இதுபோன்ற சாதனைகளைத்தான் எங்களுடைய இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் செய்து வருகிறார். இந்தியா மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஆசிய கண்டமுமே உற்று நோக்குகின்ற வகையில், 7 ஆவது ஆசிய ஆண்கள் சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியை சென்னையில் கடந்த ஆண்டு நடத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். இது போன்று விளையாட்டுத் துறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்த சாதனைகள் ஏராளம் உண்டு.

இதன் நீட்சியாக நடப்பாண்டிலும் விளையாட்டுத்துறையில் 24 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு இளைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தையும் கவனத்தில் கொண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது எங்கள் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, களரி, அடிமுறை, சிலம்பம் போன்ற தென் தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரிய தற்காப்பு கலைகளும் அவற்றின் உட்பிரிவுகளான சுவடுமுறை, மல்யுத்தம், குத்துவரிசை, அடிதடை, வர்மம் போன்ற அரிய கலைகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் சீரிய நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

விளையாட்டு கட்டமைப்புகளைப் பரவலாக்கம் செய்யும் வகையில், விளையாட்டு அரங்கங்கள் இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் தலா ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக 9 சட்டமன்றத் தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக முதலமைச்சருடைய மினி ஸ்டேடியம் திட்டத்தின் கீழ் 22 சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கங்கள் ரூ. 66 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் நோக்கமாக கொண்டிருக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலும் இந்தாண்டு சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார். இதுபோன்ற திட்டங்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.


இதற்காக கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், கழக மீனவரணி சார்பாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலி னுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்

### ஜூலை 2 (1991)



**1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.**

**1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு "அண்ணா விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**"கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்

தி.மு.க.